கணிதம்

(புதிய பாடத்திட்டம்)

ஆண்டு 9

பகுதி *I & II*

ஆக்கம் :

திரு. வி. சச்சிதானந்தன்

உதவி :

செல்வி சௌ. சபாரட்னம்

திருமதி யோ. பூலோகசிங்கம்

விலை : **45.00**

மயூரதி வெளியீடு - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986 முதல்

கணிதம்

ஆண்டு 9

பகுதி - I & II

ஆக்கம் :
திரு. வி. சச்சிதானந்தன்

உதவி :
செல்வி சௌ. சபாரட்ணம்
திருமதி யோ. பூலோகசிங்கம்

விலை : ரூ. 45.00

மயூரதி வெளியீடு - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

		பக்கம்	
1.	மட்டந்தட்டல்	1	ஜனவரி
2.	வெளிப்படை உண்மைகள்	2	,,
3.	சுட்டிகள்	3	,,
4.	வேலை, காலம், பணம்	5	,,
5.	புள்ளி ஒன்றில் உள்ள கோணங்கள்	6	,,
	* மீட்டற் பயிற்சி - 1 *	8	,,
6.	வட்டங்கள்	9	பெப்ரவரி
7.	அட்சரகணிதப் பின்னங்களைக் கூட்டலும், கழித்தலும்	11	,,
8.	சமாந்தரம்	13	,,
9.	எண்களை நியம முறையில் எழுதுதல்	16	,,
10.	மடக்கை 1.	17	,,
	* மீட்டற் பயிற்சி 2 *	18	,,
11.	தொடைகள்.	19	மார்ச்
12.	முக்கோணிகளின் ஒருங்கிசைவு.	21	,,
13.	வரைபு 1.	23	,,
14.	முக்கோணி ஒன்றின் கோணங்கள்.	24	,,
15.	மடக்கைகள் 11.	26	,,
	* மீட்டற் பயிற்சி 3 *	27	,,
16.	கணக்குப் பதிதல்.	29	மே
17.	காரணிகள்.	30	,,
18.	முக்கோணி, இணைகரம், சரிவகம், ஆகியவற்றின் பரப்பளவு	31	,,
19.	கூட்டத்தரவு.	33	,,
20.	நிகழ்தகவு.	35	,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

		பக்கம்	
	* மீட்டற் பயிற்சி 4 *	36	மே
21.	மட்டந்தட்டல் 11.	37	,,
22.	எண்ணின் அடி 1.	39	,,
23.	பல்கோணி ஒன்றினுடைய கோணங்களின் கூட்டுத்தொகை.	40	,,
24.	பரப்பளவு.	41	யூன்
25.	ஒருங்கமை சமன்பாடுகள் 1.	42	யூலை
26.	கூட்டல் விருத்தி.	43	,,
27.	எளிய வட்டி.	45	,,
28.	வர்க்கமூலம்.	46	,,
29.	பைதகரசின் தொடர்பு	47	செப்ரம்பர்
30.	கனவளவு.	48	,,
31.	அமைப்புகள்	49	,,
32.	எண்ணின் அடி 11.	50	,,
33.	வட்டம் ஒன்றின் நாணின் இயல்புகள்	51	ஒக்ரோபர்
34.	விகிதமும் விகிதசமமும்	52	,,
35.	வரைபு. 11.	53	,,
36.	ஒருங்கமை சமன்பாடுகள் 11.	54	,,
37.	நிகழ்தகவு 11.	55	நவம்பர்
38.	உருப்பெருக்கம்.	56	,,
39.	அளவிடைக்கு வரைதல்.	57	,,
	* மீட்டற் பயிற்சி *	59	,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் உரை

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் அழிக்கமுடியாத சொத்து- அவர்களின் கல்விக்கு நிகர் வேறெதுவும் இல்லை என்னும் கருத்து முன்னொரு காலத்தில் நிலவியது. இது பொய்யாகி விடுமோ என்ற நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இதற்குக்காரணம் போர்க்காலச் சூழ்நிலை, பொருளாதாரத் தடை மட்டுமன்றி 1990இல் சுயவிருப்பத்தின் பேரில் அநுபவம் மிக்க ஆசிரியர்கள் ஓய்வுபெற்றமை பல ஆசிரியர்கள் இடம்பெயர்ந்து வீட்டை விட்டும் நாட்டைவிட்டும் வெளியேறியமை மற்றும் சிறந்த ஆசிரியர்கள் பதவி உயர்வு என்ற பெயரில் அதிபர்களாகவும், கல்வி அதிகாரிகளாகவும் மாறியமையும் என்றால் அது மிகையாகாது.

மாணவர் கல்வி குறிப்பாக கணித பாடத்தில் மாணவர்நிலை தற்போது பெரும் பாதிப்படைந்துள்ளது வேதனையைத் தருகின்றது. இதனை நிவர்த்தி செய்ய மாணவர் பிரத்தியேக ரியூசன்களைத்தேடி ஓடி அலைவதை நாம் காணமுடிகின்றது. இதனால் அவர்கள் பெறுவது கல்வி அறிவு என்பதிலும் பார்க்க உடற்களைப்பும், நேரவிரையமும், பணவிரையமும் தான் என்றால் அதை அனைவரும் மறுப்பதற்கில்லை.

அத்துடன் குறிப்பாகக் கணித பாடத்தில் இலவச பாடநூலில் உள்ள கணக்குகளை ரியூசன் வகுப்புகளில் ஆசிரியர்கள் கரும்பலகையில் செய்துவிட அவற்றை அப்படியே மாணவர் பார்த்து எழுதிவைத்துக்கொண்டு பாடசாலை ஆசிரியர் அக்கணக்குகளை வீட்டுவேலையாகக் கொடுத்துவிடும்போது மீண்டும் அவற்றைப் பிரதிசெய்து ஒப்படைப்பதை நான் என் அநுபவத்தில் கண்கூடாகப்பார்த்திருக்கின்றேன். இதுபற்றி நான் சிந்தித்தபோது இலவச பாடநூலின் அடிப்படையில் மாணவர்கள் சிந்திக்கவும், சுயமாகச்செயற்படவும் தூண்டும் வகையில் ஆண்டு 9 நூலை முதன்முதலாக 1989இல் "றோனியோ" பிரதிமூலம் வெளியிட்டேன். நூலை உபயோகித்த ஆசிரியர்களும், மாணவர்களும் பாராட்டினர். தொடர்ந்தும் அவ்வாறே வெளியிட்டுவந்தேன். ஆயினும் நூலை வாங்கி உபயோகிப்பதற்கு சிலர் "றோனியோ" பிரதி என சிந்தித்தனர். பொருளாதார நிலைகாரணமாக அச்சில் வெளியிட முடியாதநிலை இருந்து வந்தது.

தற்செயலாக கொழும்புவர நேர்ந்தபோது எனது நெருங்கிய நண்பரும், லட்சுமி அச்சக உரிமையாளருமான திரு. வே. திருநீலகண்டன் அவர்களுடன் இதுபற்றிக் கூறியபோது அவர்தானே முழுப்பொறுப்பையும் ஏற்று இந்நூலை புதிய அச்சு வடிவில் வெளியிட முன் வந்துள்ளமை பாராட்டுதற்குரியது. இதனால் தரமான கணிதநூல் சரியான வடிவில் இல்லை என்ற நீண்ட நாட்குறை இத்துடன் நீங்கும் என நம்புகிறேன்.

சேவையை முதன்மையாகக் கொண்டு நானும், நண்பரும் செயற்படுகின்றமையால் கணித ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றாரும், வர்த்தகப்பெருமக்களும் எம்மை இவ்வழியில் ஊக்குவிப்பார்கள் என நம்புகிறேன். இதற்கு அவர்கள் தரும் ஆதரவின்மூலம் மேலும் பலநூல்கள் தோன்ற வழிபிறக்கும் என்பதைக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி

வி. சச்சிதானந்தன்
(கணித ஆசிரியன்)
"குமரன் குன்று"
ஊரியாட்டி
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிக் கல்விப் பணிப்பாளர்

திரு ப. விக்னேஸ்வரன் B. Sc. Dip. in. Ed S. L. E. A. S. Class III

அவர்கள் அளித்த

அணிந்துரை

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் கணித பாட அடைவு தற்போது மிகவும் வீழ்ச்சி அடைந்து செல்வதைகை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.

இந்நிலையை ஓரளவேனும் தடுப்பதற்கு ஆசிரியர் திரு. வி. சச்சிதானந்தன் அவர்கள் செயற்பட்டு வருவதை நான் நன்கு அறிவேன். அவர் 1979ம் ஆண்டு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை யாற்றிய காலத்தில் புகழ் பெற்ற ஆசான் திரு. இ. அம்பிகைபாகன் (அம்பி) அவர்களுடனும் திரு. S. ஜெயபாலன் அவர்களுடனும் இணைந்து முதன் முதலாக G. C. E. (O/L) கணிதம் I, II, III ஆகிய நூல்களை எழுதினார். அவற்றை கொழும்பு விஜயலட்சுமி அச்சகத்தார் பொறுப்பேற்று நூல் வடிவம் கொடுத்தனர். இந்நூல் இப்போதும் சில ஆசிரியர் தேடிக் கிடைக்காத நூலாக உள்ளது உண்மை நிகழ்வாகும்.

இதன் மூலம் புகழ் பெற்ற ஆசிரியர் திரு. வி. சச்சிதானந்தன் அவர்கள் பின்னர் யா/யூரியன் கல்லூரி கணித ஆசிரியராக 9 வருடகாலம் சிறப்பாகச் சேவை புரிந்ததோடு 5 வருடகாலம் கணித பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றி ஆசிரியர், மாணவர் மத்தியில் மதிக்கப்பட்டதை யாவரும் அறிவர். பின்னர் அதிபர் சேவைக்குப் பரீட்சை மூலம் தெரிவான அவர் அதிபர் பொறுப்பை ஏற்றுச் சென்றார். "நான் அறிந்த கணிதத்தை மாணவருக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்" என்ற ஆவல் தான் அவரை நூல் ஆக்கத்திற்குத் தூண்டியுள்ளது. "மயூரதி வெளியீடுகள்" என்ற பெயரிலும் "மங்களா கல்விச் சேவை" என்ற பெயரிலும் இவரது ஆக்கங்கள் வெளி வருகின்றன. இந்நூல்களை உபயோகிப்பதன் மூலம் மாணவ உலகம் பயன் அடையும் என்பது உறுதி

திரு. ப. விக்னேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.1 மட்டந்தட்டல்

பயிற்சி 1

1. பின்வரும் எண்களைக் கிட்டிய பத்திற்கு மட்டந்தட்டுக.

   176, 234, 261, 347, 350, 365, 435, 575, 595, 685, 755, 895.

2. வினா 1 இலுள்ள எண்களைக் கிட்டிய நூறிற்கு மட்டந்தட்டுக.

3. பின்வரும் எண்களைக் கிட்டிய நூறிற்கு மட்டந்தட்டுக.

   1 175, 1 250, 1 251, 2 350, 4 381, 5 795, 6 950, 6 958, 10 986

4. வினா 3 இலுள்ள எண்களைக் கிட்டிய ஆயிரத்திற்கு மட்டந்தட்டுக.

5. பின்வரும் எண்களை கிட்டிய ஆயிரத்திற்கு மட்டந்தட்டுக.

   19 480, 12 356, 13 600, 29 507, 36 593, 99 149, 99 500, 109 524, 21 843, 35 427, 417 000, 53 059.

6. வினா 5 இலுள்ள எண்களைக் கிட்டிய பத்தாயிரத்திற்கு மட்டந்தட்டுக.

7. பின்வரும் எண்களைக் கிட்டிய முதலாம் தசமத்திற்கு மட்டந்தட்டுக.

   2.65, 3.55, 4.95, 5.450, 5.453, 6.951, 7.854, 9.950, 10.703, 19.97, 21.053, 25.850, 120.1469, 264.945.

8. வினா 7 இலுள்ள எண்களைக் கிட்டிய முழு எண்ணிற்கு மட்டந்தட்டுக.

9. பின்வரும் எண்களை இருபொருளுடைய இலக்கங்களுக்கு மட்டந்தட்டுக.

   0.0715, 0.0824, 0.0945, 0.0975, 0.0996, 0.03945, 0.4951, 0.5071, 0.9571, 0.9650, 1.750, 3.500, 4.5003, 6.500, 8.950.

10. வினா 9 இலுள்ள எண்களை ஒருபொருளுடைய இலக்கங்களிற்கு மட்டந்தட்டுக.

11. பின்வரும் எண்களை மூன்று பொருளுடைய இலக்கங்களுக்கு மட்டந்தட்டுக.

    0.007043, 2.0073, 2.6008, 2.750, 35.821, 39.951, 43.89, 50.054, 129.02, 239.61, 312.501, 535.002.

12. வினா 11 இலுள்ள எண்களை இருபொருளுடைய இலக்கங்களிற்கு மட்டந்தட்டுக.

13. பின்வரும் ஒவ்வொரு எண்ணும் எத்தனை பொருளுடைய இலக்கங்களை உடையது என இனங்காண்க.

    0.00756, 0.000345, 0.6501, 0.0407, 0.3900, 0.4302, 0.62007, 1.009, 2.500, 3.601, 15.0, 200.00.

14. வினா 13 இலுள்ள எண்களை இரு பொருளுடைய இலக்கங்களாக மட்டந்தட்டுக.

15. பின்வருவனவற்றின் பெறுமதிகளைக் கண்டு அவற்றை இரு பொருளுடைய இலக்கங்களிற்கு மட்டந்தட்டுக.

1) 1.5×1.5	2) 3.5×3.5	3) 65×65
4) 2.8×2.2	5) 4.3×4.7	6) 74×7.6
7) 31×390	8) 0.12×180	9) 0.033×37
10) $20.25 \div 4.5$	11) $302.5 \div 5.5$	12) $6.09 \div 0.29$
13) $132.09 \div 119$	14) $132.24 \div 11.4$	
15) $11016 \div 108$		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.2 வெளிப்படை உண்மைகள்

1. உரு 1 இல் PA = BQ எனின் AQ இற்குச் சமனான நீளம் எது ?



(உரு 1)

2. வெளிப்படை உண்மைகளைப் பயன்படுத்திப் பின்வரும் சமன்பாடுகளைத் தீர்க்க.

1) $x - 3 = 1$	2) $x + 2 = 7$	3) $\frac{x}{2} = 4$
4) $3x = 6$	5) $2x + 1 = 9$	6) $3x - 5 = 1$
7) $\frac{1}{3}x - 1 = 2$	8) $\frac{1}{4}x - 1 = 0$	9) $\frac{1}{2}x + 3 = 5$
10) $\frac{x-3}{2} = 5$	11) $2(x - 3) = 14$	12) $3(x + 1) = 12$

3. உரு 2 இல் $B\hat{O}C = A\hat{O}E$, $C\hat{O}D = D\hat{O}E$ எனின் $B\hat{O}D$ இற்குச் சமனான கோணத்தைக் காரணத்துடன் தருக.



(உரு 2)

4. உரு 2 இல் $AB \perp OD$, $B\hat{O}C = A\hat{O}E$ எனின் $C\hat{O}E$ இன் இருகூறாக்கி OD என நிறுவுக.

5. உரு 2 இல் $A\hat{O}C = B\hat{O}E$ எனின் மற்றொரு சமனான கோணச்சோடியைக் காரணத்துடன் தருக.

6. உரு 3 இல் AXY ஓர் இருசமபக்க முக்கோணியாகும். BX = CY எனின் ABC ஓர் இருசமபக்க முக்கோணி எனக்காட்டுக.



7. உரு 4 இல் ABCD ஒரு செவ்வகம், BCPQ ஒரு சதுரம் எனின் AQPD ஒரு செவ்வகம் என நிறுவுக.



(உரு 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(உரு 5)

8. உரு 5 இல் $\widehat{ABP} = \widehat{ABQ}$, ABC ஒரு நேர்கோடு எனின் $\widehat{PBC} = \widehat{QBC}$ எனக்காட்டுக.



(உரு 6)

9. உரு 6 இல் $\widehat{ABC} = \widehat{ACB}$, OBC ஒரு சமபக்க முக்கோணி எனின் $\widehat{ABO} = \widehat{ACO}$ என நிறுவுக.



(உரு 7)

10. உரு 7 இல் $\widehat{PQB} = \widehat{SRC}$ எனின் $\widehat{BQR} = \widehat{CRQ}$ எனக்காட்டுக. இதிலிருந்து ARS = BQR எனக்காட்டுக.

11. உரு 7 இல் $\widehat{AQR} = \widehat{ARQ}$ எனின் $\widehat{ARS}$ இற்குச் சமனான 3 கோணங்களைக் காரணத்துடன் தருக.

12. உரு 7 இல் AQR = SRC எனின் POB = SRC எனவும் $AQR = \widehat{ARQ}$ எனவும் காட்டுக.

9.3 சுட்டிகள்

பயிற்சி 3

1. பின்வருவனவற்றின் பெறுமதியைக் காண்க.

அ) 2^3	ஆ) 3^2	இ) 5^2
ஈ) 2^5	உ) $2^3 \times 2^2$	ஊ) $3^2 \times 3^2$
எ) $5^2 \times 2^3$	ஏ) $2^4 \times 3^2$	ஐ) $2^2 \times 3^2 \times 5$

2. பின்வருவனவற்றின் முதன்மைக் காரணிகளைக் கண்டு அவற்றை வலுக்களிற்றருக.

அ) 64	ஆ) 81	இ) 72	ஈ) 100	உ) 360
ஊ) 392	எ) 675	ஏ) 900	ஐ) 1 568	ஒ) 1 600

3. பின்வருவனவற்றைச் சுருக்கித் தனி வலுக்களிற் தருக.

1) $a^2 \times a^3$	2) $2^3 \times 2^4$	3) $3^2 \times 3^4$
4) $3^5 \div 3^2$	5) $2^3 \div 2^3$	6) $x^{10} \div x^4$
7) $(c^2)^3$	8) $(5^2)^3$	9) $x^2 \times x^3 \times x^7$
10) $a^3 \times a^5 \div a^8$	11) $(P^3)^2 \times P^5 \div P^4$	12) $a^2b \times ab^3 \times a^2b^4$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பின்வருவனவற்றை நேர்ச்சுட்டிகளிற் தருக.

1) a^{-2} 2) 3^{-1} 3) 5^{-3} 4) x^{-2}

5) $\frac{1}{2^{-1}}$ 6) $\frac{1}{x^{-3}}$ 7) $(\frac{a}{b})^{-2}$ 8) $(\frac{3}{2})^{-1}$

9) $(\frac{5}{2})^{-2}$ 10) $\frac{a^2}{b^{-3}}$ 11) $\frac{x^{-2}}{y}$ 12) $\frac{5^{-2}}{4^{-3}}$

5. பின்வருவனவற்றை மறைச்சுட்டிகளிற் தருக.

1) $\frac{1}{3}$ 2) $\frac{1}{x}$ 3) $\frac{1}{y^5}$ 4) $\frac{1}{5^2}$

5) 3^5 6) 7^3 7) $(\frac{x}{y})^2$ 8) $(\frac{1}{2})^2$

9) $(\frac{5}{3})^4$ 10) $\frac{2^3}{3^2}$ 11) $\frac{x^5}{y^7}$

6. பின்வருவனவற்றைச் சுருக்குக.

1) $a^5 \times a^{-2}$ 2) $x^4 \times x^{-3} \times x$ 3) $b^6 \times (b^{-2})^2 b^5$ 4) $c^{10} \times (c^3)^{-2} \times c^2$

5) $2^3 \times 2^{-2} \times 2$ 6) $3^5 \times 3^{-4} \times 3^2$ 7) $10^{-4} \times 10^2 \times 10^{-3}$ 8) $2a^5 \times 3a^{-2} \times 5a$

9) $x^{-5} \div x^2$ 10) $y^3 \times y^{-4} \div y$ 11) $(a^3)^{-2} \times a^5 \div a^{-3}$ 12) $(x^2)^{-1} \times (x^3)^2 \div x^{-3}$

7. பின்வருவனவற்றைச் சுருக்கிப் பெறுமதி காண்க.

1) $2^3 \times 2 \times 2^{-2}$ 2) $3^7 \times 3^{-5} \div 3^2$ 3) $5^3 \times (5^2)^{-2} \times 5^3$

4) $7^2 \times (7^3)^2 \div 7^6$ 5) $a^3 \times (a^{-1})^{-2} \div a^4$ 6) $x^{-4} \times (x^{-3})^2 \div x^{-7}$

7) $2y^3 \times 6y^2 \div 4y^5$ 8) $(10^2)^{-3} \times (10^{-5})^{-2} \div 10^3$ 9) $10^4 \times (10^2)^{-3} \div 10^{-5}$

8. பின்வருவனவற்றைச் சுருக்கி நேர்ச்சுட்டிகளில் விடை தருக.

1) $2^6 \times 2^{-3} \div 2^5$ 2) $3^2 \times 3^{-4} \div 3^{-1}$ 3) $5^{-7} \times 5^{-2} \div 5^{-5}$

4) $a^{-2} \times a^{-5} \div a^{-8}$ 5) $(x^3y^{-2})^2 \div x^2y^{-1}$

9. $a = 2,\ b = -3,\ c = 0,\ x = -2$ ஆகவுள்ள போது பின்வருவனவற்றின் பெறுமதியைக் காண்க.

1) a^{-1} 2) b^{-1} 3) a^c

4) x^{-3} 5) a^b 6) x^b

7) b^x 8) $(x^{-2})^3$ 9) $(3ax^2)^{-1}$

10) $6a^3b^{-2}$ 11) $9a^{-2}b^{-1}x^3$ 12) $2a^3 + bx^2$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.4 வேலை, காலம், பணம்

பயிற்சி 4

1. 5 மனிதர் 4 மணித்தியாலங்களிற் செய்யும் வேலை எத்தனை மனித மணித்தியாலங்கள்?
2. 10 மனிதர் 6 நாட்களில் செய்யும் வேலை எத்தனை மனித நாட்களாகும்?
3. 12 மனிதர் ஒரு வீட்டுக்கூரையை $7\frac{1}{2}$ மணித்தியாலங்களில் அமைத்தனர்: இதற்கு செலவான மனித மணித்தியாலங்கள் எவ்வளவு?
4. ஒரு தோட்டத்தைக் கொத்துவதற்கு 2 மனிதர் பொறுப்பேற்று ஒரு நாளில் 8 மணிநேரம் வேலை செய்து 5 நாட்களில் முடித்தனர். இதற்குத் தேவைப்பட்ட மனித மணித்தியாலங்கள் எத்தனை?
5. 15 மனித மணித்தியால வேலையொன்றை

   (அ) 4 மனிதர் செய்வதற்கு எத்தனை மணித்தியாலங்கள் தேவை?

   ஆ) 5 மணித்தியாலங்களில் செய்துமுடிக்க எத்தனைபேர் தேவை?
6. 4 மனிதர் ஒரு வேலையை 6 நாட்களில் செய்து முடிப்பர். 3 மனிதர் இவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
7. ஓர் ஒப்பந்தக்காரன் ஒரு வேலையை 20 நாட்களில் செய்துமுடிப்பதற்கு ஒப்புக்கொண்டு 4 பேரை வேலைக்கமர்த்தினான். 12 நாட்களில் பொறுப்பேற்ற வேலையின் $\frac{1}{2}$ பங்கு மட்டுமே செய்துமுடிக்கப்பட்டிருந்தது. மீதி வேலையைக் குறித்த நாளில் செய்து முடிப்பதற்கு இன்னும் எத்தனைபேர் தேவை?
8. ஒரு வீதியை 14 நாட்களில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு 8 பேரை வேலைக்கு அமர்த்தியபோது 10 நாட்களில் $\frac{5}{9}$ பங்கு வீதியையே அமைக்க முடிந்தது. திட்டமிட்டபடி மீதி வேலையை முடிக்க இன்னும் எத்தனை பேரை உடனடியாக வேலைக்குச் சேர்க்க வேண்டும்?
9. 10 மனிதர் நாளொன்றிற்கு 6 மணிநேரம் வேலைசெய்து 18 நாட்களில் ஒரு வேலையைச் செய்து முடிப்பர். 15 பேர் நாளொன்றிற்கு 8 மணிநேரம் வேலை செய்தால் எத்தனை நாட்களில் முடிக்கலாம் ?
10. 6 மனிதர் 20 நாட்களில் செய்யும் வேலையை 10 பெண்கள் 24 நாட்களில் செய்து முடிப்பர். எனின் 1 மனிதன் செய்யும் வேலை எத்தனை பெண்கள் செய்யும் வேலைக்குச் சமன் எனக் காண்க? 3 ஆண்களும் 2 பெண்களும் சேர்ந்து இவ்வேலையச் செய்து முடிக்க எத்தனை நாட்கள் தேவை ?
11. ஒரு கிணற்றை 12 மனிதர் 8 நாட்களில் வெட்ட முடியும். இவ்வாறு 12 மனிதர் கிணற்றைவெட்ட ஆரம்பித்து 5 நாட்களின் பின் 3 பேர் வேலையைவிட்டு நீக்கப்பட்டனர். மீதமான வேலையை எஞ்சியுள்ளோர் எத்தனை நாட்களில் வெட்டிமுடிப்பர் ?
12. 15 மனிதர் ஒரு வேலையின் $\frac{1}{3}$ பங்கைச் சில நாட்களில் செய்து முடித்தனர். அதன் பின்னர் 9 பேர் அவர்களுடன் சேர்ந்து மீதி வேலையை 20 நாட்களில் செய்து முடித்தனர். முதலில் வேலை செய்த 15 பேரும் முழு வேலையையும் செய்துமுடிக்க எத்தனை நாட்கள் எடுக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. 2 ஆண்களும், 3 பெண்களும் ஒரு வேலையை 7 நாட்களிற் செய்து முடிப்பர். 3 ஆண்களும், 2 பெண்களும் அதேவேலையை 6 நாட்களிற் செய்துமுடிப்பர். 4 ஆண்களும் 12 பெண்களும் சேர்ந்து எத்தனை நாட்களில் முழு வேலையையும் செய்து முடிப்பர்?

14. 10km நீளமான பாதை ஒன்றை 30 நாட்களில் செய்து முடிக்க ஒப்புக்கொண்டு 50 மனிதர் நாளொன்றிற்கு 6 மணிநேரம் வேலை செய்தனர். 10 நாட்களில் 3km பாதையையே அமைக்க முடிந்தது.

அ) மீதிவேலையை குறித்தநாளில் முடிக்க நாளொன்றிற்கு அவர்கள் எத்தனை மணிநேரம் வேலை செய்ய வேண்டும் ?

ஆ) 100 மனிதர் இம்முழு வேலையையும் நாளொன்றிற்கு 5 மணிநேரம் வேலை செய்தால் எத்தனை நாட்களில் முடிக்கலாம் ?

9.5 புள்ளி ஒன்றிலுள்ள கோணங்கள்

பயிற்சி 5

1. உரு 1 இல்

அ) $x = 110^\circ$ எனின் $y = ?$

ஆ) $y = 72^\circ$ எனின் $x = ?$

இ) $x = 123^\circ$ எனின் $y = ?$

ஈ) $y = 66^\circ$ எனின் $x = ?$

உ) $x = 142\frac{1}{2}$ எனின் $y = ?$



(உரு 1)

2. ஒரு நேர்கோட்டில் அமைந்துள்ள இரு அடுத்துள்ள கோணங்களில் ஒன்று 50° எனின் மறுகோணத்தின் பருமன் யாது?

3. இரு நேர்கோடுகள் ஒன்றையொன்று வெட்டும்போது உண்டாகும். குத்தெதிர்க் கோணங்கள் சமனென நிறுவுக. (தேற்றம் நிறுவல்)

4. உரு 2 இல்

அ) $a = 95^\circ$ எனின் ஏனையவற்றின் பெறுமதியைக் காண்க.

ஆ) $b = 64^\circ$ எனின் ஏனையவற்றின் பெறுமதிகளைக் காண்க.

இ) $c = 115^\circ$ எனின் ஏனையவற்றின் பெறுமதிகளைக் காண்க.

ஈ) $d = 49.5^\circ$ எனின் ஏனையவற்றின் பெறுமதிகளைக் காண்க.



(உரு 2)

5. உரு 3 இல்

1) $x = y = 55^\circ$ எனின் z ஐக் காண்க.

2) $x = 48^\circ, z = 65^\circ$ எனின் y ஐக் காண்க.

3) $y = 75^\circ, y - z = 10^\circ$ எனின் x, z ஐக் காண்க.

4) $x - y = 15^\circ, y + z = 105^\circ$ எனின் x, y, z ஐக் காண்க.



(உரு 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உரு 4 இல் என்பன POS, QOT நேர்கோடுகளாகும்.

1) $a = 100^\circ$ $c = 45^\circ$ எனின் ஏனையவற்றைக் காண்க.

2) $d = 37^\circ, e = 55^\circ$ எனின் ஏனையவற்றைக் காண்க.

3) $b + c = 107^\circ, a = 98^\circ$ எனின் ஏனையவற்றைக் காண்க.

4) $c = d, b = 85^\circ$ எனின் ஏனையவற்றைக் காண்க.



(உரு 4)

7. உரு 5 இல் AB, CD ஆகிய நேர்கோடுகளை PQRS என்னும் நேர்கோடு வெட்டுகிறது. பின்வருவனவற்றைக் காரணங்களுடன் நிறுவுக.

1) $a = e$ எனின் $d = f$ என நிறுவுக.

2) $d = f$ எனின் $b = h$ என நிறுவுக.

3) $e = a$ எனின் $d + e$ இன் பெறுமதி காண்க.

4($c + f = 180^\circ$ எனின் $a = g$ என நிறுவுக.

5) $b = f = 65^\circ$ எனின் ஏனையவற்றின் பெறுமதி காண்க.

6) $a = 125^\circ, f = 55^\circ$ எனின் ஏனையவற்றின் பெறுமதி காண்க.



(உரு 5)

8. உரு 6 இல்

அ) $A\hat{O}C = 65^\circ$, $B\hat{O}D = C\hat{O}E = 60^\circ$, $D\hat{O}F = 70^\circ$ $B\hat{O}E = 50^\circ$ எனின் நேர்கோடு ஒன்றை இனங்காண்க.

ஆ) AB, CD, EF என்பன நேர்கோடுகளாகும்.

1) $C\hat{O}E = B\hat{O}E$ எனின் $A\hat{O}E$ இற்குச் சமனான கோணத்தைக் காண்க.

2) $A\hat{O}E = A\hat{O}D$ எனின் $A\hat{O}C = A\hat{O}F$ என நிறுவுக.

3) $B\hat{O}D = 50^\circ$, $A\hat{O}F = 60^\circ$ எனின் ஏனைய கோணங்களைக் கணித்தறிக.



(உரு 6)

9. உரு 7 இல் a, b, c, d ஆகியவற்றின் பெறுமதிகளைக் காண்க.



(உரு 7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்டற் பயிற்சி 1

1. பின்வருவனவற்றைக் கிட்டிய நூறிற்கு மட்டந்தட்டுக.

அ) 275 ஆ) 650 இ) 750 ஈ) 1 249

உ) 1 452 ஊ) 1 950

2. பின்வருவனவற்றை இரு தசமதானங்களிற்கு மட்டந்தட்டுக.

அ) 0.745 ஆ) 1.635 இ) 4.0256 ஈ) 6.987

உ) 7.995 ஊ) 3.0996

3. பின்வருவனவற்றை மூன்று பொருளுடைய இலக்கங்களுக்கு மட்டந்தட்டுக.

அ) 0.7092 ஆ) 0.007856 இ) 1.0050 ஈ) 2.0582

உ) 3.1092 ஊ) 5.995 எ) 6.897 ஏ) 75.95

ஒ) 82.992 ஓ) 89.951

4. வெளிப்படை உண்மைகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைத் தீர்க்குக.

அ) $3x - 1 = 8$ ஆ) $\frac{1}{5}x + 1 = 0$

இ) $2(x + 3) = 6$ ஈ) $\frac{x-2}{3} = 9$

5. பின்வருவனவற்றைச் சுருக்கி நேர்ச்சுட்டிகளில் தருக.

a) $x^{\frac{1}{2}} \times x^{\frac{1}{2}}$ b) $a^{\frac{2}{3}} \times a^{\frac{2}{3}} \times a^{\frac{2}{3}}$ c) $2^5 \times 2^{-2}$

d) $(a^3)^2 \div (a^2)^3$ e) $\frac{2^3 \times 3^5}{3^{-2} \times 2^2}$

6. ABCD என்பது ஒரு சதுரமாகும். CDX என்பது ஒரு சமபக்க முக்கோணியாகும்.



அ) $A\widehat{D}X = B\widehat{C}X$ எனக் காரணத்துடன் நிறுவுக.

ஆ) $A\widehat{X}D = B\widehat{X}C$ எனின் $A\widehat{X}C$ இற்குச் சமனான கோணத்தைக் காரணத்துடன் தருக.

7. $a = 3,\ b = 2,\ c = -4$ எனின் பின்வருவனவற்றின் பெறுமதி காண்க.

1) $2a^2$ 2) $3a + 2b + 3$ 3) $a^2 + 2b^2 - c$

4) $3ab - b^2c + 2c$ 5) $5ab + bc^2 - 2ac$

8. ஒரு வேலையை 9 நாட்களில் செய்து முடிப்பதற்கு ஒப்புக்கொண்டு 5 பேர் வேலையை ஆரம்பித்தனர். ஆனால் 6 நாட்களில் அவர்கள் அவ்வேலையின் $\frac{5}{12}$ பங்கை மட்டுமே செய்து முடித்தனர். முன்னர் ஒப்புக்கொண்டபடி மீதி வேலையையும் முடிக்க உடனடியாக இன்னும்எத்தனைபேர் அவர்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எனக் காண்க ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அ) உரு 1 இல் $\hat{AOC}$ இன் இருசூறாக்கி OX ஆகும். $\hat{AOB}$, $\hat{AOC}$ ஆகியவற்றைக் காண்க.

ஆ) உரு 2 இல் 1) $\hat{AOB}$ ஐக் காண்க.

2) $\hat{AOC}$ ஐக் காண்க.

3) O இல் நிற்கும் ஒருவனுக்குப் பின்வருவனவற்றின் நிலைகளைத் திசைகோளிற்றருக.

i) A ii) B iii) C



(உரு 1)



(உரு 2)

9.6 வட்டங்கள்: வட்டப்பரிதி, பரப்பளவு

பயிற்சி 6

1. பின்வரும் அட்டவணையில் வட்டத்தின் ஒரு அளவீடு தரப்பட்டுள்ளது. ஏனையவற்றைக் காண்க.

	ஆரை	விட்டம்	பரிதி	பரப்பளவு
1)	7 cm	———	———	———
2)	———	7 cm	———	———
3)	———	28 cm	———	———
4)	10.5 cm	———	———	———
5)	2.1 m	———	———	———
6)	———	———	44 cm	———
7)	———	———	30.8 cm	———
8)	———	———	39.6 cm	———
9)	———	———	———	616 cm^2
10)	———	———	———	13.86 m^2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒரு பெரிய வட்டத்தட்டிலிருந்து சிறிய வட்டத்தட்டொன்று வெட்டி அகற்றப்படுகிறது. அவை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது. வெற்றிடங்களை நிரப்புக.

	பெரிய வட்ட ஆரை	சிறிய வட்ட ஆரை	எஞ்சிய பகுதியின் பரப்பளவு
1)	10.5c m	7 cm	______
3)	10 cm	4 cm	______
3)	15 cm	8 cm	______
4)	25 cm	10 cm	______
5)	14 cm	______	462 cm^2
6)	6 m	______	110 m^2
7)	______	2m	242 m^2
8)	19 cm	______	1056 cm^2
9)	______	11 cm	1430 cm^2



3. பின்வரும் மாதிரி வடிவங்களின் சுற்றளவுகளையும், பரப்பளவுகளையும் காண்க. (அளவீடுகள் யாவும் cm எனக் கொள்க.)



(வினா 3இல் b தவிர்ந்த ஏனைய உருக்களில் உள்ள வட்ட விற்கள் அரைவட்டப் பரிதிகளாகும்)

4. 70cm பக்கமுள்ள சதுரவடிவமான பலகை ஒன்றிலிருந்து 70cm விட்டமுள்ள வட்டம் ஒன்று வெட்டி எடுக்கப்படுகின்றது. வீணாகிய பலகையின் பரப்பளவைக் காண்க.

5. 28cm ஆரையுள்ள ஒரு கார்ச்சில்லு நிமிடத்திற்கு 1000 தடவை சுழல்கின்றது. காரின் வேகம் மணிக்கு எத்தனை km எனக் காண்க.

6. சில்லின் விட்டம் 84cmஆகவுள்ள சைக்கிளின் வேகம் நிமிடத்திற்கு 472.2mஆகும். அச்சில்லு செக்கனுக்கு எத்தனை தடவை சுழல்கின்றது எனக் காண்க.

7. ஒரு மணிக்கூட்டின் நிமிடக்கம்பியின் நீளம் 21cm ஆகும். இக்கம்பியின் நுனியின் வேகம், நிமிடத்திற்கு எத்தனை mm எனக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.7 அட்சரகணிதப் பின்னங்கள் கூட்டல், கழித்தல்

பயிற்சி 7

1. சுருக்குக:

a) $\frac{x}{4} + \frac{x}{4}$ b) $\frac{3x}{4} + \frac{x}{4}$ c) $\frac{3a}{5} - \frac{a}{5}$ d) $\frac{5x}{6} - \frac{x}{6}$

e) $\frac{5a}{9} + \frac{4a}{9}$ f) $\frac{6y}{7} + \frac{4y}{7}$ g) $\frac{7y}{10} - \frac{2y}{10}$ h) $\frac{2a}{5} + \frac{3a}{5} + \frac{a}{5}$

i) $\frac{5x}{8} - \frac{3x}{8} - \frac{x}{8}$ j) $\frac{7x}{10} - \frac{9x}{10} + \frac{3x}{10}$

2. சுருக்குக:

1) $\frac{a}{2} + \frac{a}{4}$ 2) $\frac{x}{2} - \frac{x}{3}$ 3) $\frac{2y}{3} + \frac{5y}{6}$ 4) $\frac{3n}{5} - \frac{3n}{10}$

5) $\frac{2x}{3} + \frac{3x}{4}$ 6) $\frac{m}{2} + \frac{m}{3} - \frac{m}{6}$ 7) $\frac{2a}{3} + \frac{a}{4} - \frac{5a}{6}$ 8) $\frac{3x}{5} - \frac{3x}{10} + \frac{x}{2}$

9) $\frac{3y}{4} - \frac{y}{2} - \frac{y}{8}$ 10) $\frac{5x}{6} - \frac{x}{4} + \frac{7x}{12} - \frac{x}{2}$

3. சுருக்குக:

1) $\frac{1}{x} + \frac{2}{x}$ 2) $\frac{5}{a} - \frac{2}{a}$ 3) $\frac{3}{y} + \frac{4}{y} - \frac{5}{y}$

4) $\frac{2}{3x} + \frac{1}{x}$ 5) $\frac{3}{4m} - \frac{2}{3m}$ 6) $\frac{1}{2a} + \frac{1}{3a} - \frac{1}{4a}$

7) $\frac{2}{3n} - \frac{3}{5n} + \frac{1}{2n}$ 8) $\frac{2}{3y} - \frac{1}{6y} - \frac{1}{2y}$ 9) $\frac{3}{4b} + \frac{1}{3b} - \frac{1}{2b}$

10) $\frac{-2}{5x} + \frac{7}{8x} - \frac{1}{4x}$

4. சுருக்குக:

1) $\frac{x+1}{2} + \frac{x+3}{2}$ 2) $\frac{2x+5}{4} + \frac{2x-1}{4}$ 3) $\frac{4x+1}{3a} - \frac{x+4}{3a}$

4) $\frac{2a+3}{5x} - \frac{a-1}{5x}$ 5) $\frac{3x+7}{5} + \frac{4x+6}{5} - \frac{2x+3}{5}$ 6) $\frac{n+5}{2x} - \frac{n-1}{2x}$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) $\frac{2y+1}{3a} + \frac{y-5}{2a}$ 8) $\frac{3a-2}{4b} - \frac{2a-1}{3b}$

9) $\frac{3n}{4} - \frac{n-1}{2} + \frac{n+2}{3}$ 10) $\frac{3x}{5x} - \frac{x-2}{2x} - \frac{1-x}{4x}$

5. சுருக்குக:

1) $\frac{1}{x} + 2$ 2) $\frac{1}{a} - 3$ 3) $\frac{1}{x} + \frac{1}{y}$ 4) $\frac{1}{x} - \frac{1}{y}$

5) $\frac{1}{2} + \frac{1}{a}$ 6) $\frac{a}{x} + b$ 7) $\frac{1}{2a} + \frac{1}{3a}$ 8) $\frac{2}{3} - \frac{1}{b}$

9) $\frac{1}{a} - \frac{2}{b} + \frac{3}{c}$ 10) $\frac{2}{ab} + \frac{3}{bc} - \frac{1}{ac}$ 11) $\frac{y}{x} + \frac{x}{y}$ 12) $\frac{n}{m} - \frac{m}{n}$

13) $\frac{1}{x} - \frac{1}{y} - \frac{1}{z}$ 14) $\frac{x}{a} - \frac{y}{b} + \frac{z}{c}$ 15) $\frac{z}{xy} + \frac{x}{yz} - \frac{y}{zx}$

6. சுருக்குக:

1) $\frac{1}{x+3} + \frac{2}{x+3}$ 2) $\frac{3}{x+5} - \frac{1}{x+5}$ 3) $\frac{5}{a+b} + \frac{2}{a+b}$

4) $\frac{4}{x-y} - \frac{3}{x-y}$ 5) $\frac{1}{a} + \frac{1}{a+1}$ 6) $\frac{2}{x} - \frac{5}{x+5}$

7) $\frac{5}{y} + \frac{2}{y-2}$ 8) $\frac{1}{x+2} - \frac{3}{x}$ 9) $\frac{3m}{2m-3n} - \frac{m+3n}{2m-3n}$

10) $\frac{5}{x-y} + \frac{2}{x-y}$ 11) $\frac{3a}{2a+1} - \frac{a-1}{2a+1}$ 12) $\frac{5}{3x-2y} - \frac{2}{2y-3x}$

13) $\frac{3}{x+2} - \frac{2}{x-2}$ 14) $\frac{2}{2x-a} + \frac{1}{2x+a}$ 15) $\frac{2}{x+2} + \frac{1}{x+1} - \frac{1}{x+2}$

16) $\frac{2}{3x+2} - \frac{1}{3x-2} + \frac{3}{x}$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.8 சமாந்தரக்கோடுகள்

பயிற்சி 8



1. உரு 1 இல் PQ, RS என்னும் நேர்கோடுகளை என்னும் நேர்கோடு வெட்டுகின்றது. இவ்வுருவில்

   1) ஒன்றுவிட்டகோணச் சோடிகளெவை?
   2) ஒத்தகோணச் சோடிகளெவை?
   3) நேயக்கோணச் சோடிகளெவை?
   4) குத்தெதிர்க் கோணச் சொடிகளெவை?
   5) மேற்கூறியவற்றுள் சமனாக அமைபவை எவை?



2. உரு 2 இல் சமனான கோணச்சோடிகள் யாவற்றையும் எழுதி அவை எவ்வகையில் சமனாக அமைகின்றன என்பதையும் தருக.

3. உரு 2 இல் 1) $a = 103^{\circ}$ எனின் ஏனைய கோணங்களின் பெறுமதிகளையும் காரணத்துடன் காண்க.

   11) $d = 68^{\circ}$ எனின் ஏனைய கோணங்களின் பெறுமதிகளைக் காரணத்துடன் காண்க.

4. கீழே தரப்பட்டுள்ள உருவங்களில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள கோணங்களைக் காரணத்துடன் கணித்தறிக.

(1)



(2)



(3)



(4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5)



(6)



(7)



(8)



(9)



(10)



(11)



(12)



(13)



(14)



(15)



5. பின்வரும் உருக்களில் // கோடுகளை காரணத்துடன் இனங்காண்க.

(1)



(2)



(3)



(4)



(5)



(6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. i) உரு 3 இல் $x + y = a$ என நிறுவுக.



(உரு 3)

ii) உரு 4 இல் $b + d + e = 180^{\circ}$ என நிறுவுக.



(உரு 4)

iii) உரு 5 இல் $x = y$ என நிறுவுக.



iv) உரு 6 இல் $g + h + i = 360^{0}$ என நிறுவுக.



v) உரு 7 இல் $j + k = r$ என நிறுவுக.



(உரு 7)

vi) உரு 8 இல் $a + b + c = 180^{0}$ என நிறுவுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.9 எண்களை நியமவடிவில் எழுதுதல்

பயிற்சி 9

1. பின்வருவனவற்றை நியமவடிவில் எழுதுக.

1)	27	2)	350	3)	46 500	4)	750 000
5)	12 748 000	6)	902 480	7)	1 000 500	8)	395
9)	682.47	10)	13.479	11)	0.0375	12)	0.000 243 591

2. பின்வருவனவற்றை நியமவடிவில் எழுதுக.

1) 20 000 000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆதிமனிதன் தோன்றினான்.
2) 6 000 000 000 ஆண்டுகளுக்கு முன்னர் பூமி பிறந்தது.
3) சூரியனிலிருந்து பூமி 148 000 000 km தொலைவில் உள்ளது.
4) 1981இல் யாழ்ப்பாண நகருக்கு நாள் ஒன்றிற்குத் தேவையான நீரின் அளவு 1 100 000 இலீற்றராகும்.
5) இலங்கையின் முழுநிலப்பரப்பளவு 16 310 000 ஏக்கராகும்.

3. பின்வரும் நியமவடிவிலுள்ள எண்களைத் தனி எண்ணாகத் தருக.

1)	1.0×10^2	2)	2.5×10^4	3)	3.0×10^5
4)	2.75×10^4	5)	1.075×10^7	6)	1.4142×10^6
7)	7.0532×10^2	8)	3.1472×10^3	9)	1.7321×10^5
10)	3.97×10^0	11)	2.064×10^1	12)	1.975×10^0
13)	07.43×10^{-1}	14)	2.05×10^{-3}	15)	9.652×10^{-7}
16)	3.71×10^{-4}	17)	5.681×10^{-2}	18)	3.5012×10^{-6}

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.10 மடக்கை 1

பயிற்சி 10

1. கீழுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.

2^0	2^1	2^2	2^3	2^4	2^5	2^6	2^7	2^8	2^9	2^{10}	2^{11}	2^{12}	2^{13}	2^{14}	2^{15}
1	2	4	8	–	–	–	–	–	–	–	–	–	–	–	32768

2. வினா 1 இல் பூர்த்தி செய்யப்பட்ட அட்டவணையைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றின் பெறுமதி காண்க.

1) 32×64 2) 16×512 3) 64×64

4) 128×256 5) 2048×16 6) $32 \times 128 \times 8$

7) $512 \div 32$ 8) $1024 \div 16$ 9) $4096 \div 64$

10) $16384 \div 1024$ 11) $32768 \div 512$ 12) $32768 \div 2048$

13) $\sqrt{1024}$ 14) $(4096)^{\frac{1}{3}}$ 15) $\sqrt{256} \times \sqrt{16384}$

16) $\sqrt{4096} \times (512)^{\frac{1}{3}}$

3. கீழ்வரும் எண்களை 2 இன் வலுக்களாக எழுதிப் பின் அவற்றை அடி இரண்டின் மடக்கைகளாகத் தருக. உ-ம்: $32 = 2^5 \Rightarrow$ மட$_2$ $32 = 5$ //

1) 8 2) 64 3) 256 4) 1024 5) 4096

6) 16384 7) 32768 8) $\frac{1}{128}$ 9) $\frac{1}{512}$ 10) $\frac{1}{2043}$

4. பின்வரும் எண்கள் ஒவ்வொன்றினதும் அடி இரண்டின் மடக்கைகளான எண்களைக் காண்க.

1) 4 2) 7 3) 10 4) 0

5) 12 6) 1 7) 14 8) 5

9) –1 10) –3 11) –5 12) –8

5. பின்வருவனவற்றின் பெறுமதிகளைக் காண்க:

1) மட$_2$2 2) மட$_2$32 3) மட$_2$128 4) மட$_2$512

5) மட$_3$27 6) மட$_3$243 7) மட$_4$256 8) மட$_5$625

9) மட$_7$343 10) மட$_9$81 11) மட$_{10}$1000 12) மட$_6$1296

13) மட$_2$ $\frac{1}{16}$ 14) மட$_5$ $\frac{1}{125}$ 15) மட$_3$ $\frac{1}{243}$ 16) மட$_6$ $\frac{1}{216}$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்டற் பயிற்சி 2

1. 10.5cm பக்கமுடைய சதுரவடிவப் பலகை ஒன்றிலிருந்து வெட்டி எடுக்கப்படக்கூடிய வட்டவடிவப் பலகையின் அதிகூடிய பரப்பளவையும், வயும் காண்க.

2. உரு 1 இலுள்ள உருவின் சுற்றளவையும், பரப்பளவையும் காண்க. (இங்குள்ள விற்கள் யாவும் $\frac{1}{2}$ வட்டவிற்களாகும்.)



(உரு 1)

3. பின்வருவற்றைச் சுருக்குக.

i) $\frac{2x}{3} - \frac{x}{6}$ ii) $\frac{4}{5x} + \frac{2}{3x} - \frac{1}{2x}$

iii) $\frac{1}{x+2} - \frac{1}{x-2}$ iv) $\frac{1}{2x+6} - \frac{1}{x+3}$

4. உரு 2 இல் x, y, z ஆகியவற்றைக் காண்க.



5. உரு 3 இல் a, b என்பவற்றைக் கணித்தறிக.



6. உரு 4 இல் xஐக் கண்டு கோணங்களைக் கணித்தறிக.



(உரு 4)

7. பின்வருவனவற்றை நியம வடிவிற்றருக.

அ) 50760 ஆ) 153.27 இ) 0.00325 ஈ) 0.7259

8. பின்வருவனவற்றைத் தனி எண்ணாகத் தருக.

அ) 3.642×10^{2} ஆ) 9.007×10^{5}

இ) 1.05×10^{-3} ஈ) 5.4×10^{-4}

9. பின்வருவனவற்றின் பெறுமதி காண்க.

அ) மட$_2$256 ஆ) மட$_3$729 இ) மட$_5$3125 ஈ) மட$_7$2401

10. பின்வருவனவற்றை இரண்டின் வலுக்களாக எழுதிப்பின் சுருக்கிப் பெறுமதி காண்க.

அ) 32 × 32 ஆ) 2048 ÷ 16

இ) 64 × 256 ÷ 32 ஈ) 3700 × 32 ÷ 612

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.11 தொடைகள்

பயிற்சி 11

1. பின்வருவனவற்றுள் தொடைகளிற்குரிய சரியான எடுத்துக்காட்டுகள் எவை?
   1) உமது வகுப்பிலுள்ள பெண்கள்.
   2) உமது பாடசாலையிலுள்ள உயரமான ஆசிரியர்கள்.
   3) உமது வகுப்பிலுள்ள விவேகமான மாணவர்கள்.
   4) உமது வீட்டிலுள்ளவர்களில் 175cm உயரத்திலும் குறைந்த உயரமுடையவர்கள்.
   5) 10 இற்கும் 20 இற்கும் இடைப்பட்டமுதன்மை எண்கள்.
   6) யாழ் குடாநாட்டிலுள்ள மலைகள்.
   7) முதன்மை நிறங்கள்.
   8) அழகிய பறவைகள்
   9) இலங்கையிலுள்ள நீளமான ஆறுகள்.

2. A = {10 இலும் குறைந்த முதன்மை எண்கள்} எனின் பின்வருவனவற்றிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

1) 3 — A	2) 6 — A	3) 1 — A
4) 2 — A	5) 9 — A	6) 11 — A

3. பின்வரும் தொடைகள் ஒவ்வொன்றையும் இருவேறு முறைகளிற் குறித்துக் காட்டுக.
   1) A = {10 இலும் குறைந்த ஒற்றை எண்கள்}
   2) B = { 36 இன் முதன்மைக் காரணிகள்}
   3) C = {1, 4, 9 }
   4) D என்பது முதன்மை நிறங்களின் தொடை
   5) P = JAFFNA என்னும் சொல்லிலுள்ள எழுத்துக்கள்
   6) E = { 24240 என்னும் எண்ணிலுள்ள இலக்கங்கள் }
   7) Q = { x = 2, y = 1 என்னும் கோடுகள் இடைவெட்டும் புள்ளி }
   8) R என்பது 15 இலும் குறைந்த 3இன் மடங்குகளின் தொடையாகும்.
   9) S = { CXCIX என்ற எண்ணிலுள்ள குறியீட்டு இலக்கங்கள் }

4. பின்வருவனவற்றின் தொடைப்பிரிவுகள் யாவற்றையும் தருக.
   1) { 2 }
   2) { ச, க, ல }
   3) { திகதி என்ற சொல்லிலுள்ள எழுத்துக்கள் }
   4) { COLOMBO என்னும் சொல்லிலுள்ள எழுத்துக்கள் }
   5) முதல் நான்கு வினாக்களிலிருந்து தொடைப்பிரிவுகளின் எண்ணிக்கைகளைக் காண்க.

   இவற்றிலிருந்து தொடைப்பிரிவுகளின் எண்ணிக்கை பற்றிய (a^n)தொடர்பை உய்த்தறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பின்வருவனவற்றிலுள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான குறியீட்டால் நிரப்புக.

1) {2} – {12 இன் முதன்மைக் காரணிகள்}

2) சதுரம் – {செவ்வகம்}

3) {இணைகரம்} – {நாற்பக்கல்கள்}

4) (5, 2) – { x = 5 என்னும் கோட்டிலுள்ள புள்ளிகள்}

5) {2, 3, 6} – {36 இன் முதன்மைக் காரணிகள்}

6) {கறுப்பு} – {முதன்மை நிறங்கள்}

7) {1, 4} – {சதுர எண்கள்}

8) காகம் – {விலங்குகள்}

9) {மா, பலா, வாழை} – {பழ மரங்கள்}

10) – ⊃ { 2, 3, 5 }

11) – ∈ {முக்கோணிகள்}

12) – ∉ {5 இன் மடங்குகள்}

6. பின்வரும் ஒவ்வொரு தொடைகளுக்கும் பொருத்தமான அகிலத் தொடைகளைத் தருக.

1) {யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு}

2) {காகம், கிளி, புறா, மயில்}

3) {முதன்மை எண்கள், இரட்டை எண்கள்}

4) {கார், பஸ், மோட்டார் சைக்கிள்}

5) {கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, தமிழ்}

6) {பேனை, பென்சில், வெண்கட்டி}

7) {வயலின், வீணை, நாதசுரம்}

7. பின்வருவனவற்றுள் வெறுந்தொடைகளை இனங்காண்க.

1) {10இற்கு மேற்பட்ட இரட்டை முதன்மை எண்கள்}

2) {இருசமபக்கச் செங்கோண முக்கோணிகள்}

3) {பூக்காமற் காய்க்கும் மரங்கள்}

4) {உமது வகுப்பிலுள்ள 25 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள்}

5) {மூலைவிட்டங்கள் சமனற்ற நாற்பக்கல்கள்}

6) {புறக்கோணங்களின் கூட்டுத்தொகை 360^0 ஆகவுள்ள எண்கோணிகள்}

7) {6இன் மடங்குகளில் 2இன் மடங்காக அமையாதவை}

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பின்வருவனவற்றுள் சமனான தொடைகளை இனங்காண்க

1) A = {2, 3, 5} B = { 30இன் முதன்மைக் காரணிகள் }
2) P = {1, 3, 5, 7, 9} Q = { 3, 9, 7, 1, 5 }
3) C = {முதன்மை எண்கள் } D = { 2, 3, 5, 7 }
4) R = {ஒருகோணம் 90^0 ஆகவுள்ள கேத்திரகணித உருவங்கள் }
   S = {சதுரம், செவ்வகம்}
5) E = { x = 1, y = 0 என்னும் கோடுகள் இடைவெட்டும்புள்ளி } F = { 1, 0 }
6) G = {5, 2} H = {x = 5, y = 2 என்னும் கோடுகளின் பொதுப்புள்ளி }
7) M = { (3, 9) } N = { x = 3, x = 9 என்னும் கோடுகளின் பொதுப்புள்ளி }

9. பின்வருவனவற்றின் மூலகங்களை வென்னுருவிற் குறிக்குக.

1) ℰ = { 10 இலும் குறைந்த எண்ணும் எண்கள }
   A = {10 இலும் குறைந்த ஒற்றை எண்கள் }
2) ℰ = {2, 4, 6, 8, 10, 12, 14, 16} R = {4, 8, 12, 16} P = {6, 12}
3) ℰ = { 20 இலும் குறைந்த முதன்மை எண்கள் }
   x = {28 இன் முதன்மைக் காரணிகள் }
   y = { 45 இன் முதன்மைக் காரணிகள் }

9.12 முக்கோணிகளின் ஒருங்கிசைவு

பயிற்சி 12

1. முக்கோணிகள் ஒருங்கிசையும் நான்கு விதிகளையும் தருக.
2. இரு முக்கோணிகள் ஒருங்கிசைவனவாயின் அவ்விருமுக்கோணிகள் பற்றிய மூன்று முக்கிய உண்மைகளையும் தருக.
3. பின்வருவனவற்றுள் ஒருங்கிசையும் முக்கோணிச்சோடிகளை இனங்கண்டு அவை எவ்விதியின் கீழ் ஒருங்கிசைகின்றன எனவும் தருக.

(1)

(2)

(3)

(4)

(5)

(6)

(7)

(8)


(9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பின்வரும் உருக்களில் ஒருங்கிசையும் முக்கோணச்சோடிகளையும் அவை ஒருங்கிசைவதற்குரிய விதியையும் தருக.



5. வினா 4 இலுள்ள ஒருங்கிசையும் முக்கோணிகளின் பெயர்களை ஒழுங்குமுறைப்படி எழுதுக.

6. கீழ்வரும் முக்கோணிச்சோடிகளில் சமனான உறுப்புகள் தரப்பட்டுள்ளன. முக்கோணிகளை வரையாது அவை ஒருங்கிசைவனவா? இல்லையா? என இனங்காண்க. எந்நிபந்தனையின் கீழ் ஒருங்கிசையும் எனத் தருவதோடு எஞ்சிய சமனான உறுப்புகளையும் தருக.

1) $\Delta ABC,\ \Delta PQR$ $\quad \hat{A} = \hat{Q},\ \hat{B} = \hat{P},\ AC = QR$

2) $\Delta XYZ,\ \Delta LMN$ $\quad XY = LM,\ YZ = NM,\ \hat{Y} = \hat{N}$

3) $\Delta PQR,\ \Delta DEF$ $\quad PQ = DE,\ \hat{Q} = \hat{F} = 90^\circ,\ \hat{R} = \hat{D} = 40^\circ$

4) $\Delta IJK,\ \Delta BCD$ $\quad \hat{I} = \hat{B} = 90^\circ,\ JK = DC,\ JI = BD$

5) $\Delta RST,\ \Delta CDE$ $\quad \hat{S} = \hat{D},\ \hat{R} = \hat{E},\ \hat{T} = \hat{C}$

6) $\Delta QPO,\ \Delta YWX$ $\quad OQ = XY,\ OP = WY,\ QP = WX$

7) $\Delta ABC,\ \Delta DEF$ $\quad AB = DF,\ \hat{C} = \hat{D},\ \hat{B} = \hat{F}$

7. 1) ΔPQR இல் PQ இன் நடுப்புள்ளி X, $RX \perp PQ$ எனின் PR = QR என நிறுவுக.

2) ΔABC இல் AB = AC, BC இன் நடுப்புள்ளி O எனின் $O\hat{B}A = O\hat{C}A$ என நிறுவுக.

3) அருகேயுள்ள உருவில் $\Delta AOD \equiv \Delta OCB$ என நிறுவி AD = BC எனவும் நிறுவுக.



4) அருகேயுள்ள நாற்பக்கலில் $\Delta PSR \equiv \Delta PQR$ என நிறுவி அதன்மூலம் PS = QR, RS = PQ எனவும் நிறுவுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.13 வரைபுகள்

பயிற்சி 13

1. பின்வரும் சமன்பாடுகளினால் குறிக்கப்படும் வரைபுகளை ஒரே ஆள்கூற்றுத்தளத்தில் வரைக.

1) $y = x$ 2) $y = 2x$ 3) $y = \frac{1}{2}x$

4) $y = 4x$ 5) $y = \frac{3}{4}x$

2. வினா 1இல் வரைந்த வரைபுகள் ஒவ்வொன்றினதும் படித்திறனைக் காண்க.

3. பின்வரும் சமன்பாடுகளினால் குறிக்கப்படும் வரைபுகளை ஒரே ஆள்கூற்றுத்தளத்தில் வரைக.

1) $y = -x$ 2) $y = -\frac{1}{3}x$ 3) $y = -2x$

4) $y = -5x$ 5) $y = -\frac{3}{2}x$

4. வினா 3இல் வரைந்த வரைபுகள் ஒவ்வொன்றினதும் படித்திறனைக் காண்க.

5. பின்வரும் படித்திறனையுடையதும் உற்பத்தியினூடாகச் செல்வதுமான நேர்கோடுகளின் சமன்பாடுகளைத் தருக.

1) 5 2) 7 3) -3 4) $\frac{2}{5}$ 5) $-\frac{1}{2}$

6) $-\frac{3}{10}$ 7) $\frac{9}{10}$ 8) -15 9) $-\frac{2}{7}$ 10) $\frac{5}{3}$

6. உற்பத்தியினூடாகவும் கீழே தரப்பட்டுள்ள புள்ளியினூடாகவும் செல்லும் நேர்கோட்டின் படித்திறனைக் கண்டு அவற்றின் சமன்பாட்டையும் எழுதுக.

1) (1, 1) 2) (2, 3) 3) (–1, 2) 4) (–4, 2)

5) (3, –6) 6) (8, 10) 7) (–2, –4) 8) (–2, –6)

9) (–3, 9) 10) (4, –8) 11) (–4, 10) 12) (6, –9)

13) (5, 0) 14) (0, –7) 15) (–6, –2) 16) (15, –3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.14 முக்கோணி ஒன்றின் கோணங்கள்

பயிற்சி 14

1. முக்கோணி ஒன்றின் ஒரு பக்கத்தை நீட்டப்பிறக்கும் புறக்கோணம் அதன் அகத்து எதிர்க்கோணங்களிரண்டினதும் கூட்டுத்தொகைக்குச் சமனாகுமென நிறுவுக.
2. ஒரு முக்கோணியின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை இரு செங்கோணங்கள் ஆகுமென நிறுவுக.
3. பின்வரும் உருக்களில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள கோணங்களின் பருமன்களைக் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13)



(14)



(15)



(16)



(17)



(18)



4. முக்கோணி ஒன்றின் கோண அளவுகள் பின்வருமாறு அமையும்போது அவற்றின் பெறுமதிகளைக் கணித்தறிக.

1) x, x, x	2) x, 2x, 3x
3) 2a, 3a, 4a	4) x + 10, 2x, 2x + 10
5) a + 15, 2a, 2a – 15	6) 70, a, a
7) 90°, b, 2b	

5. பின்வருவனவற்றுள் எவை ஒரு முக்கோணியின் கோண அளவுகளாய் அமையக்கூடியவை?

1) 60°, 60°, 60°	2) 70°, 70°, 70°	3) 90°, 20°, 90°
4) 60°, 50°, 70°	5) 25°, 50°, 25°	6) 45°, 60°, 55°
7) 35°, 85°, 60°	8) 120°, 30°, 30°	9) 100°, 60°, 40°

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஒரு முக்கோணியின் இரு கோணங்களின் கூட்டுத்தொகை மூன்றாவது கோணத்திற்குச் சமன் எனின் அது ஒரு செங்கோண முக்கோணியாகுமென நிறுவுக.

7. ΔABC இல் $\hat{A} = 72^\circ$, $\hat{B}$, $\hat{C}$ ஆகியவற்றின் இருகூறாக்கிகள் O இல் சந்திக்கின்றன. $B\hat{O}C$ இன் பெறுமதியைக் கணித்தறிக.

8. ΔPQR இல் $\hat{P}$, $\hat{Q}$ ஆகியவற்றின் இருகூறாக்கிகள் X இற் சந்திக்கின்றன. $P\hat{X}Q = 100^\circ$ எனின் $P\hat{R}Q$ இன் பெறுமதியைக் காண்க.



9. அருகேயுள்ள உருவில் AB // CD, $B\hat{P}Q$, $D\hat{Q}P$ ஆகியவற்றின் இருகூறாக்கிகள் X இற் சந்திக்கின்றன. $PX \perp QX$ என நிறுவுக.

10. ΔABC இல் AB, AC ஆகியன முறையே X, Y வரை நீட்டப்பட்டுள்ளன. $B\hat{C}Y$, $C\hat{B}X$ ஆகியவற்றின் இருகூறாக்கிகள் O இற் சந்திக்கின்றன. $B\hat{O}C = 90^\circ - \frac{1}{2} BAC$ என நிறுவுக.

9.15 மடக்கைகள் - 11

பயிற்சி 15

1. அ) 1, 10, 100, 1000, 10000 ஆகியவற்றை 10இன் வலுக்களாகத் தருக.
   ஆ) $மட_{10}1$, $மட_{10}10$, $மட_{10}100$, $மட_{10}1000$, $மட_{10}10000$ ஆகியவற்றின் பெறுமதிகளைத் தருக.

2. மடக்கை அட்டவணையை உபயோகித்துப் பின்வருவனவற்றின் மடக்கைகளைக் காண்க.

1)	2.0	2)	2.05	3)	3.1	4)	3.17	5)	4.3
6)	4.39	7)	5.2	8)	5.26	9)	7.0	10)	7.06
11)	7.09	12)	7.54	13)	8.90	14)	9.29	15)	9.57

3. மடக்கை அட்டவணையை உபயோகித்துப் பின்வருவனவற்றை மடக்கைகளாகவுடைய எண்களைக் காண்க.

1)	0.2304	2)	0.2227	3)	0.3692	4)	0.415
5)	0.0086	6)	0.4955	7)	0.6085	8)	0.8681
9)	0.8722	10)	0.9025	11)	0.9201	12)	0.9809

4. பின்வரும் எண்களை மடக்கை அட்டவணையின் உதவியுடன் 10 வலுக்களாகத் தருக.

1)	20	2)	205	3)	35	4)	329	5)	430
6)	439	7)	52	8)	528	9)	743	10)	7.09
11)	709	12)	8.15	13)	824	14)	9.93	15)	997
16	2700	17)	3450	18)	5600	19)	8750		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பின்வருவனவற்றின் பெறுமதியை மடக்கை அட்டவணைமூலம் காண்க.

1) $10^{0.1139}$ 2) $10^{0.2227}$ 3) $10^{1.2227}$ 4) $10^{2.3692}$
5) $10^{2.415}$ 6) $10^{1.6345}$ 7) $10^{3.6767}$ 8) $10^{2.705}$
9) $10^{1.9731}$ 10) $10^{1.8401}$ 11) $10^{2.9996}$ 12) $10^{0.7435}$
13) $10^{0.425}$ 14) $10^{3.9654}$ 15) $10^{2.9809}$

6. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்திச் சுருக்குக.

1) 2.5×2.5 2) 1.8×1.2
3) 33×3.7 4) 29×21
5) 16×14 6) 5.1×5.9
7) 1.13×1.17 8) 1.05×49
9) 27.5×18.6 10) $1.75 \times 13.6 \times 2.0$
11) $1.64 \times 2.3 \times 1.5$ 12) $15.2 \times 2.71 \times 3.54$
13) $2.56 \times 3.09 \times 6.81$ 14) $132 \times 1.69 \times 4.07$
15) $52 \times 9.08 \times 7.64$

7. மடக்கை அட்டவணைமூலம் சுருக்குக.

1) $22.5 \div 1.5$ 2) $6.21 \div 2.7$
3) $6.09 \div 1.9$ 4) $2.24 \div 1.6$
5) $12.4 \div 3.1$ 6) $23.5 \div 17.2$
7) $7.43 \div 4.51$ 8) $93.8 \div 15.7$
9) $950 \div 29.2$ 10) $675 \div 9.46$
11) $9.94 \div 3.62$ 12) $849 \div 236$
13) $1.4 \times 16 \div 2.8$ 14) $37.4 \times 6.05 \div 3.42$
15) $27.5 \times 19.6 \div 34.9$ 16) $25.2 \times 6.2 \div 16.8$

மீட்டற் பயிற்சி 3

1. பின்வருவனவற்றிலுள்ள வெற்றிடங்களில் பொருத்தமான குறியீட்டை இடுவதன்மூலம் தொடர்புபடுத்துக.

அ) {ஆடு, மாடு, குதிரை} — {மிருகங்கள்}
{முதன்மை எண்கள்}

இ) {2, 3} — {24 இன் காரணிகள்}

ஈ) {உலோகங்கள்} — {பாதரசம்}

2. அ) {"திகதி" என்னும் சொல்லிலுள்ள எழுத்துக்கள்} என்னும் தொடையின் தொடைப்பிரிவுகள் யாவற்றையும் தருக.

ஆ) வெறுந்தொடைக்கு இரு உதாரணங்கள் தருக.

இ) $\mathcal{E}$ = {10 இலும் குறைந்த எண்ணும் எண்கள்}
A = {10 இலும் குறைந்த முதன்மை எண்கள்}
B = {10 இலும் குறைந்த இரட்டை எண்கள்} இவற்றை ஒரே வென்னுருவிற் குறித்துக் காட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வரும் உருக்களில் உள்ள முக்கோணச் சோடிகளை எழுதி அவை ஒருங்கிசையும் நிபந்தனைகளையும் தருக.

(1) 

(2) 

(3) 

4. ABCD என்னும் நாற்பக்கலில் AB = AD, BC = CD எனின் $\hat{ABC} = \hat{ADC}$ என நிறுவுக.

5. அ) உற்பத்திப் புள்ளியினூடாகவும் பின்வரும் புள்ளியினூடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டைத் தருக.

1) (6, 4) 2) (–2, 4) 3) (–2, –3)
4) (10, 6) 5) (8, –12) 6) (–3, 9)

6. அருகேயுள்ள உரு 1 இல் a, b, c ஆகியவற்றைக் காண்க.



(உரு 1)

7. உரு 2 இல்

1) $\hat{ABC} = 40°$, $\hat{ACB} = 60°$ எனின் $\hat{BPC}$, $\hat{AZC}$, $\hat{AQY}$ ஆகியவற்றைக் காண்க.

2) $\hat{ACB} = 72°$, $\hat{ABC} = 38°$ எனின் $\hat{BAX}$, $\hat{BYC}$ $\hat{XRC}$ என்பவற்றைக் காண்க.



(உரு 2)

8. மடக்கை அட்டவணை மூலம் பெறுமதி காண்க.

1) மட 2.35 2) மட 340 3) மட 76.1 4) மட 18.5
5) $10^{0.4654}$ 6) $10^{1.6580}$ 7) $10^{2.7896}$

9. மடக்கை மூலம் பெறுமதி காண்க.

அ) 6.5×65 ஆ) $56 \div 7.3$ இ) $32 \times 24 \times 17.5$
ஈ) $722 \div 8.2$ உ) $62.5 \times 27.3 \div 45.5$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.6 கணக்குப்பதிதல்

பயிற்சி 16

1. சங்கரின் மாதச்சம்பளம் ரூ.2250, வீட்டுத்தோட்டத்தின் மூலம் குறித்தமாதத்தில் ரூ375 கிடைத்தது. அம்மாதத்தில் உணவிற்கான செலவு ரூ1550, பிள்ளைகளின் ரியூசன் செலவு ரூ225, போக்குவரத்துச் செலவு ரூ250, உறவினர் திருமணத்திற்கான அன்பளிப்பு ரூ150 எனின், அம்மாதத்தில் சங்கரின் பெறுகை கொடுப்பனவைக் காட்டும் கணக்கைத் தயாரிக்குக.

2. அன்றாடம் சந்தையிலே மரக்கறி வாங்கி விற்கும் ஒருவன் ஒரு நாளில் மரக்கறிகளை விற்று ரூ1560 ஐப் பெற்றான். அவன் மரக்கறிகளை வாங்கியவிலை ரூ1125, சந்தைக்கூலி ரூ15. உதவியாளனுக்கான சம்பளம் ரூ55. நிறுவைப் படிக்கற்கள் சில காணாமற்போனமையினால் ரூ75 இற்குப் புதியவற்றை வாங்கினான். அன்றைய உணவு தேனீர் போன்றவற்றிற்கு ரூ35 செலவு செய்தான். இவற்றிற்குரிய பெறுகை – கொடுப்பனவுக் கணக்கைத் தயாரித்து அவன் அன்று பெற்ற இலாபத்தைக் காண்க.

3. குமாருக்கு அவனின் மாமனார் புதுவருட அன்பளிப்பாக ரூ150 வழங்கினார். அவனின் தந்தை ரூ125 கொடுத்தார். அவனது அண்ணா ரூ40 கொடுத்தார். இப்பணத்தைக் கொண்டு அவன் ரூ115 இற்கு ஒருசோடி பதணிகளையும், ரூ23 இற்கு கணிதப்புத்தகம் ஒன்றையும், ரூ135 இற்கு ஒரு சேட்டையும் வாங்கியபின் மீதிப்பணத்திற்கு ரொபிகளையும் வாங்கினான். குமாரின் பெறுகை – கொடுப்பனவுக் கணக்கைத் தயாரித்து அவன் ரொபிகளை வாங்கிய பணம் எவ்வளவு எனவும் காண்க.

4. கட்டட நிதி சேகரிப்பதற்காக நிதியுதவிப் படக்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. இதற்காக ரூ50 பெறுமதியான 240 ரிக்கற்றுகளும், ரூ25 பெறுமதியான 360 ரிக்கற்றுகளும், ரூ10 பெறுமதியான 210 ரிக்கற்றுகளும் விற்கப்பட்டன. இப்பணத்தில் தியேட்டருக்கு ரூ3000உம், விளம்பரத்திற்கு ரூ1750உம் நுளைவுச் சீட்டிற்காக ரூ500உம், வேறுசெலவுகள் ரூ350 உம் செலவாகியது. இதற்கான பெறுகை-கொடுப்பனவுக் கணக்கைத் தயாரித்து கட்டட நிதிக்கு எஞ்சியிருந்த தொகையைக் காண்க.

5. ராஜன் ரூ150ஐ கடைக்குக் கொண்டு சென்றான். அங்கு கிடைத்த விலைவிபரப்படி பின்வரும் அட்டவணையைத் தயாரித்தான்.

அளவு	விபரம்	விலை	மொத்தவிலை
500kg	பருப்பு	ரூ 32.00	16.00
100kg	பப்படம்	ரூ 60.00	6.00
1kg	சீனி	ரூ 27.00	27.00
3kg	அரிசி	ரூ 14.00	42.00
200kg	தேயிலை	ரூ 65.00	13.00
500kg	புளி	ரூ 15.00	7.50
1kg	உப்பு	ரூ 1.50	1.50
3kg	மா	ரூ 10.00	30.00
1kg	வெண்காயம்	ரூ 15.00	15.00
			158.00

பருப்பு, சீனி, அரிசி, மா, ஆகியவற்றின் அளவில் மாற்றம் செய்யாது ஏனைய பொருட்களும் வாங்கக்கூடியதாக இவ்வட்டவணையை மீளத் தயாரிக்குக.
(சிறு தொகைப்பணம் மீதியாக இருக்கலாம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.17 காரணிகள்

பயிற்சி 17

1. பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1) $2x + 4y$
2) $3a - 6b$
3) $a^2 + 5a$
4) $a^2x - ab$
5) $4x^2 - 6xy$
6) $8a^2b + 6ab^2$
7) $2a^2b + 6ab - 4abc$
8) $x^3 - x^2y + xy^2$
9) $4p^2 - 2pq - 6p$
10) $4d - 6d^2 + 8d^3$
11) $ax^2 - acx + 3abx$
12) $3a^2x^3 - 6ax^2 + 21ax$

2. பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1) $y(x + z) + 2(x + z)$
2) $y(x + z) - 2(x + z)$
3) $xy - yz + 2x - 2z$
4) $xy - yz - 2(x - z)$
5) $a^2 + 2a - ab - 2b$
6) $a^2 - 2a + ab - 2b$
7) $5 - 10y - x - 2xy$
8) $x^3 - x^2 - x + 1$
9) $x^3 - x^2 + 3x - 3$
10) $x^3 - x^2 + x - 1$

3. பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1) $a(x - y) + 2(y - x)$
2) $b(1 - x) - a(x - 1)$
3) $m(a - b) - n(b - a)$
4) $a(2 - c) - a^2(2 - c)$
5) $4x + 4y - c(y + x)$
6) $px - q^2x + q^2y - py$
7) $x + a^2(x - y) - y$
8) $n(2a - b + 3c) - y(3c + 2a - b)$
9) $4(x + 5y) - a(x + 5y) + a^2(5y + x)$
10) $a^2(p + 3q) + 3aq + ap$

4. பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1) $x^2 + 2x + 1$
2) $x^2 - 2x + 1$
3) $x^2 + 5x + 6$
4) $x^2 + 3x + 2$
5) $a^2 + 6a + 5$
6) $b^2 + 4b - 5$
7) $x^2 + 10x + 25$
8) $x^2 - 6x + 9$
9) $x^2 - x - 6$
10) $y^2 + 2y - 8$
11) $b^2 - 2b - 8$
12) $x^2 - x - 72$
13) $48 - 14x + x^2$
14) $15 - 8a + a^2$
15) $63 - 16y + y^2$
16) $16 + 10x + x^2$
17) $3 + 4a + a^2$
18) $7 - 8a + a^2$
19) $15 - 16x + x^2$
20) $72 - 17b + b^2$
21) $12 - 7y + y^2$

5. பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1) $a^2 - 1$
2) $x^2 - 9$
3) $b^2 - 25$
4) $1 - y^2$
5) $16 - c^2$
6) $4x^2 - 1$
7) $9x^2 - 25y^2$
8) $m^2 - 121$
9) $81x^2 - y^2$
10) $(x + 2)^2 - 9$
11) $(x + 2)^2 - (x - 1)^2$
12) $(a + b)^2 - (a - b)^2$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1)	$48 \times 27 + 52 \times 27$	2)	$32 \times 35 - 22 \times 35$
3)	$34 \times 139 - 34 \times 49$	4)	$7^2 \times 125 - 7^2 \times 115$
5)	$83 \times 62 + 38 \times 83$	6)	$6.3 \times 12.75 + 6.3 \times 7.25$
7)	$9.6 \times 23.7 - 9.6 \times 13.7$	8)	$27\frac{1}{2} \times 56 - 56 \times 17\frac{1}{2}$
9)	$37^2 - 27 \times 37$	10)	$(162.45)^2 - 62.45 \times 162.45$
11)	$65^2 - 35^2$	12)	$52^2 - 42^2$
13)	$124^2 - 24^2$	14)	$25.6^2 - 5.6^2$
15)	$72.64^2 - 27.36^2$		

7. பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1)	$2x^2 + 12x + 16$	2)	$4a^2 + 8a + 4$
3)	$3t^2 - 24t + 21$	4)	$4y^2 - 24y + 20$
5)	$5x^2 - 20x - 25$	6)	$2x^2 - 10xy - 12y^2$
7)	$4a^2 - 32ab + 48b^2$	8)	$3x^2 - 12$
9)	$4a^2 - 100$	10)	$18x^2 - 8y^2$
11)	$2x^3 - 98x$	12)	$6a^3b^2 - 24ac^2$
13)	$45x^2 - 80y^2$	14)	$a^2 + 2a + 1 - b^2$

9.18 முக்கோணி, இணைகரம், சரிவகம் ஆகியவற்றின் பரப்பளவு

பயிற்சி 18

1. பின்வரும் முக்கோணிகளின் பரப்பளவுகளைக் காண்க. (இங்கு அளவுகள் யாவும் cm இல் தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பின்வரும் முக்கோணிகளில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படும் நீளங்களைக் கணித்தறிக.



3. பின்வரும் இணைகரங்களின் பரப்பளவுகளைக் காண்க.



4. பின்வரும் சரிவகங்களின் பரப்பளவுகளைக் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கீழ்வரும் உருக்களில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள நீளங்களைக் கணிக்க.



6. கீழ்வரும் உருக்களின் பரப்பளவுகளைக் காண்க.



9.19 கூட்டத்தரவு

பயிற்சி 19

1. கீழ்வரும் வினாக்களில் அ) ஆகாரம் ஆ) இடையம் இ) இடை ஆகியவற்றை காண்க.

1) 4, 4, 2, 5, 8, 6, 4, 7, 5
2) 30, 18, 30, 12, 40, 20
3) 20, 25, 25, 27, 28, 29, 29, 25
4) 85, 76, 93, 85, 93
5) 800, 570, 614, 670, 335, 670, 1570

2. ஒரு வகுப்பிலுள்ள 40 மாணவர் கணிதபாடத்திற் பெற்ற புள்ளிகள் வருமாறு.

புள்ளி	30	35	42	45	50	55	65	75
மாணவர் தொகை	3	4	5	7	9	5	4	3

இவ்வட்டவணையிலிருந்து மாணவர் பெற்ற புள்ளிகளின்

அ) ஆகாரப்புள்ளி யாது?
ஆ) இடையப்புள்ளி யாது?
இ) இடைப்புள்ளி யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஒரு மெழுகுவர்த்தியின் வாழ்க்கைக்காலம் எத்தனை மணித்தியாலங்கள் என அறிய முற்பட்ட மாணவன் ஒருவன் பின்வரும் முடிபுகளைப் பெற்றான்.

வாழ்க்கை (மணியில்)	1	1.25	1.5	2.0	2.25
மெழுகுவர்த்திகளின் எண்ணிக்கை	5	20	25	10	20

அ) மெழுகுவர்த்தியின் வாழ்க்கையின் ஆகார மணித்தியாலங்கள் எவ்வளவு?
ஆ) மெழுகுவர்த்தியின் வாழ்க்கையின் இடையக்காலம் எவ்வளவு?
இ) மெழுகுவர்த்தியின் வாழ்க்கையின் இடைக்காலம் எவ்வளவு?

4. 28, 32, 29, 33, 32, 30, 33, 33, 30, 34,
32, 29, 32, 34, 30, 34, 28, 35, 30, 32

மேலுள்ள தரவுகளுக்கான மீடிறன் அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக. அதை உபயோகித்து
அ) ஆகாரம் ஆ) இடையம் இ) இடை ஆகியவற்றைக் காண்க.

5. ஐஸ்பழ வியாபாரி ஒருவன் ஒரு மாதத்தின் 30 நாட்களில் பெற்ற இலாபம் ரூ. வருமாறு.
64, 68, 98, 70, 71, 77, 72, 75, 83, 79, 88, 92, 63, 81, 69,
81, 79, 86, 83, 68, 75, 77, 81, 91, 73, 61, 80, 98, 90, 85

அ) மேலே தரப்பட்டுள்ளவற்றின் மீடிறன் அட்டவணையைத் தயாரித்து இடையைக் காண்க.

ஆ) 60–64, 65–69, ... எனவரும் வகுப்புகளாகப் பிரித்து மீடிறனைக் கண்டு இடையை முதலாம் தசமத்திற்கு மட்டந் தட்டுக.

இ) 60–70. 70–80, ... எனவரும் வகுப்புகளாகப் பிரித்து மீடிறனைக் கண்டு இடையை மூன்று பொருளுடைய இலக்கங்களுக்கு மட்டந்தட்டுக.

6. ஆண்டு 9 வகுப்பில் வகுப்பறைத் திருத்தத்திற்காக நன்கொடை கொடுத்த மாணவர் பற்றி அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

நன்கொடை ரூபாவில்	0 – 5	6 – 10	11 – 15	16 – 20	21 – 25
மாணவர் தொகை	4	10	8	16	2

நடுப்புள்ளி அட்டவணையைத் தயாரித்து இடையைக் காண்க.

7. ஒரு வகுப்பிலுள்ள 40 மாணவர் பரீட்சை ஒன்றிற் பெற்ற புள்ளி விபரம் வருமாறு.

புள்ளிகள்	0–10	11–20	21–30	31–40	41–50	51–60	61–70	71–80	81–90	91–100
மாணவர் தொகை	1	2	2	3	6	12	8	3	2	1

இவற்றின் நடுப்புள்ளி அட்டவணையைத் தயாரித்து இடையைக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.20 நிகழ்தகவு

பயிற்சி 20

